# ஆய்வு: சமூக ஊடகச் சோர்வுள்ளோர் தவறான தகவலைப் பகிரும் வாய்ப்பு அதிகம்




சமூக ஊடக சோர்வை அனுபவிப்போர், அளவுக்கதிமான தகவல்களைச் சமாளிக்க போராடுகிறார்கள், சிந்தித்து முடிவெக்கத் திணறுகிறார்கள் என்று ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது. **படம்: பிக்ஸாபே**

2 Oct 2023 19:24 | மாற்றம் செய்யப்பட்ட நாள் / நேரம்: 2 Oct 2023 20:08 | 3 mins read

சமூக ஊடகத்தால் சோர்வாக இருப்பதாகவோ அல்லது சமாளிக்க முடியாமல் இருப்பதாகவோ கூறுபவர்கள் தவறான தகவல்களை நம்புவதும் அதை இணையத்தில் பகிரும் வாய்ப்புகளும் அதிகம். தன்னைப் பற்றியே யோசிப்பவர்கள் இதைச் செய்ய வாய்ப்பு இன்னும் அதிகம்.

இந்த விவரங்களை நன்யாங் தொழில்நுட்ப பல்கலைக்கழகம் (என்டியு) செப்டம்பர் மாதம் அறிவியல் அறிக்கைகள் இதழில் வெளியிட்ட ஆய்வறிக்கை சுட்டுகிறது.

சிங்கப்பூர், அமெரிக்கா, மலேசியா, சீனா, தாய்லாந்து, வியட்னாம், இந்தோனீசியா, பிலிப்பீன்ஸ் ஆகிய எட்டு நாடுகளைச் சேர்ந்த 8,000க்கும் மேற்பட்டோரிடம் இந்த ஆய்வு நடத்தப்பட்டது.

“சமூக ஊடகச் சோர்வு தகவல் சுமையை உருவாக்குகிறது, இது சமூக ஊடகப் பயனாளர்களின் சிந்தித்து முடிவெடுக்கும் திறனைப் பாதிக்கிறது,” என்று எல்பினு வீ கிம் வீ தகவல் தொடர்பு, தகவல் பள்ளியின் உதவிப் பேராசிரியர் சைஃபுதீன் அகமது கூறினார்.

கலிஃபோர்னியா பல்கலைக்கழக முனைவர் பட்டப் படிப்பு மாணவர் முஹம்மது இஹாப் ரசூலுடன் இணைந்து அவர் அந்த ஆய்வுக்கு தலைமை தாங்கினார்.

“இத்தகைய சூழ்நிலைகளில், தனிநபர்கள் அளவுக்கு அதிகமான தகவல்களைப் பெறுகிறார்கள். தவறான தகவல்களை கண்டறியத் திணறுகிறார்கள்,” என்று பேராசிரியர் சைஃபுதீன் மேலும் கூறினார்.

அந்த ஆய்வில் கொவிட்-19 போலிச் செய்திகள் தவறான தகவல்களுக்கு உதாரணமாகப் பயன்படுத்தப்பட்டன.

சமூக ஊடகத் தளங்களில் செயல்பாட்டு முறை, சர்ச்சைக்குரிய, பரபரப்பான, உணர்ச்சிகரமான உள்ளடக்கத்திற்கு முன்னுரிமை அளிக்கின்றன. இது சமூக ஊடக சோர்வுக்கான மற்றொரு விளக்கம் என்று பேராசிரியர் சைஃபுடின் குறிப்பிட்டார்.

இதுபோன்ற உள்ளடக்கத்தை மீண்டும் மீண்டும் பார்ப்பவர்கள் அதை உண்மை என நம்பக்கூடும்,” என்று அவர் கூறினார்.

ஜூன் 2022இல் நடத்தப்பட்ட அந்த ஆய்வில் 8,070 பேர் பங்கேற்றனர். அவர்களில் 1,008 பேர் சிங்கப்பூரைச் சேர்ந்தவர்கள்.

சமூக ஊடக சோர்வை அனுபவிப்பவர்கள் தவறான தகவல்களை நம்புவதற்கான வாய்ப்புகள் அதிகம் என்று ஆய்வு கண்டறிந்துள்ளது.

எனினும், சிங்கப்பூரில் உள்ளவர்கள் அதிக விவரம் அறிந்தவர்களாக உள்ளதாக ஆய்வில் தெரியவந்துள்ளது.

சமூக ஊடகச் சோர்வை அனுபவிக்கும் சிங்கப்பூரைச் சேர்ந்த ஒருவர் தவறான தகவலைப் பகிர்கிறாரா என்பது அவர் அத்தகவல் சரியானது என்று நினைக்கிறாரா என்பதைப் பொறுத்தது.

மற்ற ஏழு நாடுகளில், அதிக அளவு சமூக ஊடக சோர்வை அனுபவிப்பவர்கள், செய்தியின் உண்மைத்தன்மையைப் பொருட்படுத்தாமல் தவறான தகவலைப் பகிரலாம்.

மில்லியன் கணக்கானோர் சமூக ஊடகங்களை தகவல் அறியவும் பொழுதுபோக்கிற்கான ஆதாரமாகவும், தகவல்தொடர்பு முறையாகவும் நம்பியிருப்பதால் சமூக ஊடக சோர்வு, அதன் விளைவுகளில் கவனம் செலுத்துவது முக்கியம் என்று ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

போலித் தகவல் பரவலைக் கட்டுப்படுத்துதல், மின்னிலக்க அறிவை அதிகரித்தல் போன்ற நடவடிக்கைகளுடன், கொள்கை வகுப்பாளர்களும் சமூக ஊடக நிறுவனங்களும் சமூக ஊடக சோர்வைக் குறைக்கும் நோக்கில் தலையிட்டுச் செயல்பட வேண்டும் என்றும் அவர்கள் பரிந்துரைக்கின்றனர். இது சோர்வு பிரச்சினையில் கவனம் செலுத்துவதுடன், சோர்வு காரணமாக தவறான தகவல் பரப்புவதையும் கட்டுப்படுத்தலாம் என்று கூறினர்.

சமூக ஊடகம் | ஆய்வு | என்டியுசி